**கேகாலை பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 16 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கேகாலை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது சபைக்குக் கிடைத்த ரூபா 1,990,000 பெறுமதியான உழவு இயந்திரம் மற்றும் ரேலர் என்பன கணக்கீடு செய்யப்படாமையினால் மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கு மற்றும் மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 426,050 பெறுமதியான உழவு இயந்திரமொன்று ரூபா 346,877 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையால் மோட்டார் வாகனமும் வண்டியும் கணக்கு மற்றும் மூலதனத்திற்கான வருமானம் பங்களிப்புக் கணக்கு என்பன ரூபா 79,173 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மாகாண சபை நிதிஏற்பாட்டின் கீழ் 08 வேலைகளுக்குரியதாக கிடைத்த 10 சதவீத நிறுத்திவைத்தல் பணம் ரூபா 106,276 தொகையை பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கும் போது மீண்டும் கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டமையின் காரணமாக கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் கணக்குகள் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 218,549 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) நூலகப் புத்தகங்களை கொள்வனவு செய்யும் போது கிடைத்த ரூபா 40,145 தொகையான கழிவு, கிடைத்த கழிவுக் கணக்கு, செலவினக் கணக்கு, நூலகப் புத்தகக் கணக்கு மற்றும் மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்புக் கணக்குகளில் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்படடிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

06 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 64,677,884 ஆக இருந்ததுடன் அதற்குரிய பட்டோலைகள் / அறிக்கைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 63,688,839 ஆனமையால் ரூபா 989,045 வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 19,710,965 ஆகும்.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்தை விஞ்சிய செலுத்த வேண்டியிருந்த மீதி ரூபா 2,379,495 ஆகும்.

### 1.4 இனங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 1645(ஆ)(இ) மற்றும் 1646 இன் பிரகாரம் சபையின் 05 வாகனங்கள் 05 வருட காலமாகவும், 02 வாகனங்கள் 2017 ஆம் ஆண்டிற்கும் உரிய ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,300,232 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,367,721 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,737,340 | 2,893,908 | 2,227,345 | 666,562 | 2,808,140 | 3,203,718 | 2,174,898 | 1,028,820 |
| வாடகை | 100,800 | 177,282 | 130,205 | 47,077 | 1,017,000 | 1,934,418 | 1,934,418 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 985,000 | 1,034,171 | 1,034,171 | - | 1,372,000 | 1,612,725 | 1,612,725 | - |
| ஏனைய வருமானம் | 49,570,000 | 53,716,545 | 29,344,730 | 2,437,180 | 46,100,000 | 56,135,322 | 41,573,985 | 14,561,337 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது வீதவரியும் வரியும் மற்றும் ஏனைய வருமானம் முறையே 19 சதவீதத்தாலும் 40 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்ததுடன் வாடகை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் முறையே 29 சதவீதத்தாலும், 05 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப்பிரதேசத்தில் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களை முன்னரே இனங்கண்டு பெயரிட்டு அதன் பிரகாரம் ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், கடந்த 10 வருட காலப்பகுதியில் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் சபைக்குக் கிடைக்கக்கூடியதாக இருந்த ஆதனவரி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி ரூபா 958,115 தொகை மற்றும் ஏக்கர் வரி ரூபா 156,989 தொகை என்பவற்றுக்கிடையே ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாகக் காணப்படுகின்ற ரூபா 314,459 தொகையான ஆதனவரி மற்றும் ரூா 146,884 தொகையான ஏக்கர் வரி என்பவற்றை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 வாடகை

இரண்டு கடைகளுக்காக 2012 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து அறவிட வேண்டிய வாடகை ரூபா 16,140 தொகை மற்றும் ரூபா 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக அறவிட வேண்டிய ரூபா 80,299 தொகை என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 10,678,923 ஆகவும் ரூபா 30,217,745 ஆகவும் காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் அடையப்படாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் இரண்டு நலனாளிகளுக்கு மாத்திரம் சேவையை வழங்குகின்ற வீதியொன்றுக்கு கொங்கிறீட் இடுவதற்காக ரூபா 291,262 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ii) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது பிரீமிக்ஸ் (முற் கலவை) இட்டு 21 வீதிகைளப் பராமரிப்பதற்கு ரூபா 2,835,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபை அதிகாரப்பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரித்தல் இடம்பெறாதிருந்ததுடன் கரண்டுபன சந்தி முதல் றம்புக்கன பக்கமான வீதிக்கு அருகிலும், வாய்க்கால் ஓரங்களிலும் கழிவுப்பொருள் கொண்டு போடப்பட்டிருந்தது. இதன் காரணமாக அசுத்தமான சூழல் உருவாகியிருந்தது.

(ii) சாத்தியவள ஆய்வின்றி கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட மொறன்தொட்ட ஹால்மெஸ்ஸ லுணுகல வத்த காணிக்கு நுழைவு வீதியும், பாலமும் இல்லாமையின் காரணமாக உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்ததுடன் காணியைக் கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்காக சபை செலவிட்ட ரூபா 4,286,322 தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு

2016 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் மின் உபகரணங்கள் ரூபா 11,413 மற்றும் பொருட் பதிவேட்டுப் பொருட்கள் ரூபா 32,609 என பற்றாக்குறை என்பன வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த பற்றாக்குறையை தீர்த்து வைப்பதற்கு 2018 ஏப்ரல் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

சபைக்குரிய ரூபா 426,050 பெறுமதியான வாகனமொன்று 05 வருட காலமாகவும், ரூபா 625,000 பெறுமதியான வாகனமொன்று 25 வருட காலமாகவும் செயற்பாடற்றுக் காணப்பட்ட போதிலும், அந்த வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 07 செலவின விடயங்களின் ரூபா 367,000 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு 100 சதவீதமும், 15 செலவின விடயங்களின் நிதிஏற்பாடுகளின் கூட்டுமொத்தம் ரூபா 7,783,173 தொகை 85 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலுமாக கூட்டுமொத்தமாக ரூபா 8,150,173 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) நாட்குறிப்புக்களுக்கான குறிப்புக்கள் விளக்கமாக இன்மை |
| | (ii) பட்டோலைகள் கணக்குகளுடன் இணங்காமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | (i) நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்காமை. |
| | (ii) ஆதன வரி அறவிடுவதற்காக அபிவிருத்தியடைந்த பிரதேசம் இனங்காணப்படாமை |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளில் கவனத்தில் கொள்ளக்கூடிய சேமிப்புக்கள் காணப்பட்டமை |
| | (ii) மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (ஈ) வாகனக் கட்டுப்பாடு | (i) நாளாந்த ஓட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்படாமை |

(ii) வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை இடம்பெறாமை

(iii) சபை பயன்படுத்துகின்ற ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை

(iv) குறைந்த பயன்பாட்டுடன் சொத்துக்கள் காணப்பட்டடை

(v) காணிப் பதிவேடுகளில் தகவல்கள் பூர்த்தி செய்யப்படாமை